[2001 மே 24

3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவை விதி 8 (2)—ன்படி பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன். அதன் விவரம் வருமாறு:

நியமனம் செய்யப்பெற்றவர்	:	திரு. அ. அருணாசலம்
முன்மொழிந்தவர்	:	மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை
வழிமொழிந்தவர்	:	மாண்புமிகு திரு. வி. ஜெயராமன்

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. அ. அருணாசலம் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், திரு. அ. அருணாசலம் அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழகுதற்கு இனிய பண்பாளர், சட்டம் படித்தவர், என் அன்புச் சகோதரர் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுதல்கள். முதலில் பாராட்டுரையைத் தொடங்கி வைக்கின்றவர் மாண்புமிகு பேரவை முன்னவர், நிதியமைச்சர், என் அன்புச் சகோதரர் திரு. சி. பொன்னையன் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தங்களையும், பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. அருணாசலம் அவர்களையும் பாராட்டுவதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகின்றேன். தங்களது தமிழ் ஆற்றல், தங்களது